<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 10/2024**

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய அருண் **PW3.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 05.06.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அருண் | | | |
| Father /Husband Name | : | அன்பழகன் | Court | : | |
| Village | : | கிராம நிர்வாக அலுவலர், செம்பனார்கோவில் கிராமம் | Taluk | : | |
| Calling | : | | | | |
| Age | : | 39/2025 | | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது செம்பனார்கோவில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தரங்கம்பாடி தாலுக்கா, தில்லையாடி கிராமத்தில் நான் கிராம நிர்வாக அலுவலராக 2022 முதல் 2024 வரை பணிபுரிந்தேன். 2023 ம் ஆண்டில் சுந்தரேசன் த/பெ. சொர்ணபுரீஸ்வரன் என்பவர் தனக்கு சொந்தமாக புல எண் 30/20B1 என்ற இடத்தை அளவீடு செய்வதற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்ததன் பேரில் குறுவட்ட நில அளவையர் மேற்படி நிலத்தை அளப்பதற்காக வந்தபோது நானும் அவருடன் அளக்க சென்றேன். அப்போது மேற்படி நபர் காட்டிய ஆவணத்தில் உள்ள இடத்தில் விஸ்தீரணமும் நான்கெல்லையிலும் எவ்வித மாற்றமும் இல்லை. ஆனால், புல எண் மட்டும் 31/5 என்பதற்கு பதிலாக புல எண் 30/20B1 என தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக நான் சான்று வழங்கினேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம்

காட்டப்படும் சான்று நான் வழங்கியது தான். அந்த **சான்று வாசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**